Mercantile

T : +91 (44) 40432205
E : admin@mercantileventures.co.in
W : www.mercantileventures.co.in

09 November, 2019

The Manager,
Listing Department,
BSE Limited Corporate Relationship Department
1st Floor, New Trading Ring,
Rotunda Building,
P J Tower , Dalal Street, Fort,
Mumbai - 400 001.

Stock Code: 538942

Dear Sir,

Sub: Copies of information published in Newspapers.

Pursuant to Regulation 30 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, please find enclosed copies of information published in Financial Express (English version) and Maalaichudar (Tamil version).

You are requested to take the same on record.

Thanking you.

Yours faithfully,
For **Mercantile Ventures Limited**

Yoganandhan S
Company Secretary

Clip & Share Cancel

CHENNAI/KOCHI

2 இடைத்தேர்தல் வெற்றி நிரூபித்து விட்டது

தமிழக அரசியலில் வெற்றிடம் இல்லை

விக்கிரவாண்டி நன்றி அறிவிப்பு கூட்டத்தில் முதல்வர் பேச்சு

விக்கிரவாண்டி, நவ.9:

விக்கிரவாண்டி, நாங்குநேரி இடைத்தேர்தலில் அதிமுக பெற்ற அமோக வெற்றி மூலம் தமிழக அரசியலில் வெற்றிடம் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டு இருக்கிறது என முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் அதிமுக சார்பில் நடைபெற்ற வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:-

விக்கிரவாண்டி, நாங்குனேரி இடைத் தேர்தல்களில் நாடே திரும்பிப் பார்க்கும் வகையில், அதிமுகவுக்கு மாபெரும் வெற்றியை அளித்த மக்களுக்கு நன்றி. மக்களவைத் தேர்தல் வேறு, சட்டப் பேரவைத் தேர்தல் வேறு என்பதை உணர்ந்து மக்கள் ஆதரவை வழங்கினர். இடைத் தேர்தல்களிலேயே, மிகப்பெரிய, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி இதுவாகும். இந்த இடைத் தேர்தல் வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல், சட்டப்பேரவை பொதுத் தேர்தல்களுக்கான முன்னோட்டம் என்றார் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின். அவர் கூறியதை ஏற்று, இடைத் தேர்தலில் அதிமுகவை வெற்றி பெறச் செய்து, வரவிருக்கும் தேர்தல்களிலும் எங்கள் அரசுக்கே ஆதரவு என்பதை மக்கள் நிரூபித்துள்ளனர். இதேபோல, அதிமுகவில் மட்டுமல்ல, தமிழக அரசியலிலும் வெற்றிடம் எதுவும் இல்லை என்பதையும் உறுதி செய்துள்ளனர்.

தமிழகத்தில் சிலர் கட்சியைத் தொடங்காமலேயே ஆட்சிக்கு வந்து விட வேண்டும் என்று எண்ணத்தில் பேசி வருகின்றனர். 65 ஆண்டுகளாக ஒரு தொழிலைச் செய்துவிட்டு, இப்போது முதல்வராக ஆசைப்படுகின்றனர். அரசியல் என்பது தொழில் அல்ல. இரவு, பகலாக மக்களுக்காக உழைத்து சேவை செய்தால்தான் அரசியலில் முன்னேற முடியும். யார் வேண்டுமானாலும் கட்சியை ஆரம்பிக்கலாம், போட்டியிடலாம். ஆனால், தமிழகத்தில் அதிமுகதான் ஆட்சிக்கு வரும்.

நடிகராக இருந்த எம்ஜிஆர் உடனே பதவிக்கு வந்துவிடவில்லை. பல ஆண்டுகள் மக்கள் பணியாற்றினார். அவருக்கு இணையாக திரைப்படத் துறையிலிருந்து அரசியலுக்கு வந்து இமாலய வெற்றியை யாரும் பெற முடியாது என்றார் முதல்வர் பழனிசாமி.

பொதுக் கூட்டத்துக்கு சட்டத் துறை அமைச்சரும் விழுப்புரம் வடக்கு மாவட்ட அதிமுக செயலருமான சி.வி.சண்முகம் தலைமை வகித்தார். அதிமுக துணை ஒருங்கிணைப்பாளர் ஆர்.வைத்திலிங்கம் நன்றி கூறினார்.

அதிமுக கொள்கை பரப்புச் செயலர் மு.தம்பிதுரை, அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், எஸ்.பி.வேலுமணி, எம்.சி.சம்பத், கே.பி.அன்பழகன், உடுமலை கே. ராதாகிருஷ்ணன், இரா.துரைக்கண்ணு, கே.சிவீரமணி, பென்ஜமின், நிலோபர்கபீல், க.பாண்டியராஜன், மாவட்டச் செயலர் இரா.குமரகுரு, விக்கிரவாண்டி எம்.எல்.ஏ. முத்தமிழ்செல்வன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் அதிமுக சார்பில் நடைபெற்ற வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக் கூட்டத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு பேசினார்.

மிலாடி நபி பிறந்தநாள்: அ.நாராயணன் வாழ்த்து

சென்னை, நவ.9:

நபிகள் நாயகம் பிறந்த இப்புனித நாளில் உலகில் அமைதியும், சகோதரத்துவமும் நிறைந்து நலமுடன் வாழ வாழ்த்துகிறேன் என்று சமத்துவ மக்கள் கழக நிறுவனர் நாராயணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அனுப்பி உள்ள வாழ்த்து செய்தி வருமாறு:- மிலாடி நபி பிறந்தநாளையொட்டி, நபிகள் நாயகம் மிகுந்த பணிவுடையவர்கள். பிறரது துன்பத்தை நீக்குவதில் இவர்களுக்கு இணை யாருமில்லை என்று சமத்துவ மக்கள் கழக நிறுவனர் நாராயணன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் பழனிசாமியிடம் தலைமை செயலகத்தில் சுற்றுலா வளர்ச்சி கழகத்தில் அரசு பங்கு ஈவுத்தொகையான ரூ.3,12,82,125.00 காசோலையை அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் வழங்கினார். உடன் தலைமை செயலாளர் சண்முகம் மற்றும் அதிகாரிகள்.

தாம்பரம்- வேளச்சேரிக்கு மினி ரெயில் போக்குவரத்து

'ஆறு மாதத்தில் நிறைவேற்றப்படும்'

சென்னை, நவ.9:

தாம்பரம் வேளச்சேரி இடையே 15 கி.மீ. தொலைவுக்கு மினி ரெயில் விட சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும், இத்திட்டம் பற்றிய ஆய்வு விரைவில் தொடங்கும் என்றும் கூறப்படுகிறது.

மெட்ரோ முதல் திட்டத்தைப் போல், இந்த வழித்தடம் சுரங்கம் மற்றும் மேல்மட்டப் பாதைகளை உள்ளடக்கியதாக இருக்காது. முற்றிலும் தரையிலேயே ரெயில் பாதை அமைக்கப்படும்.

ஆய்வுப்பணிகள் முடிவடைந்த உடன் திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு ஆறு முதல் எட்டு மாத காலத்துக்குள் முடிவடைந்து விடும் என கூறப்படுகிறது.

மெட்ரோ ரெயில் திட்டத்தின் கீழ் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கு சுரங்கப்பாதை அமைக்க ரூ.500 கோடியும் மேல்மட்டப் பாதை அமைக்க ரூ.200 கோடியும் செலவாகியது. ஆனால் 'லைட் ரெயில்' எனப்படும் தாம்பரம் வேளச்சேரி இடையிலான திட்டத்தை ரூ.100 கோடி மதிப்பிலேயே நிறைவேற்றி விடலாம் என அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

இந்த வழித்தடம் பள்ளிக்கரணை, மேடவாக்கம், கௌரிவாக்கம் மற்றும் கிழக்கு தாம்பரத்தை உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் வேளச்சேரி எம்.ஆர்.டி.எஸ் ரெயில் நிலையத்துடன் இணைக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

இது தவிர, வேறு ஊர்களை இணைத்து வழித்தடம் அமைக்கலாமா என்பது குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது.

மெட்ரோ ரெயிலைப் போல் அல்லாமல் குறுகிய அளவில் ரெயில் பாதை இருக்கும் என்றும், திருப்பங்களில் ரெயில் எளிதில் திரும்பும் வகையில் அமைக்கப்படும் என்றும் தெரிகிறது.

தாம்பரம் - வேளச்சேரி இடையே போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதை கருத்தில் கொண்டு மெட்ரோ ரெயில் இந்த புதிய திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

இது ஸ்ரீராமர்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவை. சர்ச்சைக்குரிய இடம் இரு மதத்தினராலும் தங்கள் நம்பிக்கையை வெளிபடுத்தக்கூடிய இடமாக இருந்துள்ளது.

அயோத்தி ராமர் பிறந்த இடம் என இந்து மக்கள் நம்புகின்றனர் என்பது மறுக்க இயலாதது. இந்துக்களின் நம்பிக்கையை குலைக்க முடியாது. ஆனால், நிலத்தின் உரிமையை வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் கோர முடியாது.

அந்த இடத்தினை பாபர் மசூதி என முஸ்லிம்கள் அழைக்கின்றனர். பாபர் மசூதி இடம் முழுக்க முழுக்க தங்களது என இஸ்லாமிய அமைப்புகள் நிரூபிக்கவில்லை. நீதிமன்றங்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எதனையும் நம்பிக்கையின் அடிப்படையில் மட்டும் முடிவெடுத்து விட முடியாது. நிர்மோகி அகாரா வழக்கு விசாரணைக்கு உகந்தது அல்ல என அதனை தள்ளுபடி செய்துள்ளது.

அமைதியை காக்கவும், பாதுகாப்பினை பராமரிக்கவும் ஏற்ற வகையில் நீதிமன்ற தீர்ப்பினை ஏற்று கொள்ள வேண்டும். நிலம் 3 ஆக பிரித்து கொடுத்தது தவறு.

சர்ச்சைக்குரிய இடத்தை மூன்றாக பிரித்து அலகாபாத் நீதிமன்றம் வழங்கியது தவறு. கடந்த 1857ம் ஆண்டுக்கு முன் சர்ச்சைக்குரிய இடத்தில், உரிமைக்கான ஆவணங்களை நிரூபிக்க முஸ்லீம் அமைப்புகள் தவறி விட்டன. அயோத்தி நிலம் இந்து அமைப்புகளுக்கே சொந்தம் என சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பில் அறிவித்துள்ளது.

கண்ணன்கோட்டை, தேர்வாய் கண்டிகை பகுதியில் அமைப்பு

1 டிஎம்சி கொள்ளளவில் புதிய நீர்த்தேக்க பணி

தலைமை செயலாளர் சண்முகம் ஆய்வு செய்தார்

திருவள்ளூர், நவ.6:

கண்ணன்கோட்டை, தேர்வாய் கண்டிகை பகுதியில் ஒரு டிஎம்சி கொள்ளளவு கொண்ட புதியதாக கட்டப்பட்டுவரும் நீர்தேக்கத்தின் பணிகளை அரசு தலைமைச் செயலாளர் கே.சண்முகம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கண்ணன்கோட்டை மற்றும் தேர்வாய்கண்டிகை கிராமங்களில் உள்ள இரண்டு ஏரிகளையும் இணைத்து புதிய நீர்த்தேக்கமாக உருவாக்கி, அதில் ஆந்திர மாநிலத்தில் இருந்து வரும் கிருஷ்ணா நீரையும், பருவ காலங்களில் பொழியும் மழைநீரையும், 500 மில்லியன் கனஅடி அளவிற்கு இரண்டு முறையில் 1000 மில்லியன் கனஅடி நிரப்ப திட்டமிடப்பட்டு சென்னை மாநகர குடிநீர் தேவை மற்றும் பாசனத்திற்க்கும் ரூ.330.00 கோடி மதிப்பீட்டில் புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு, மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவால் 11.09.2013 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. திருத்திய திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.380.00 கோடி ஆகும்.

கண்டேலேறு - பூண்டி கால்வாய் தொலைக்கல் 2200 மீ-லிருந்து 8.60 கி.மீ நீளத்திற்கு வினாடிக்கு 1000 கன அடி கொள்ளளவுள்ள ஊட்டுக்கால்வாய் அமைத்து கிருஷ்ணாநீரை நீர்த்தேக்கத்தில் சேமித்தல். கண்ணன்கோட்டை மற்றும் தேர்வாய்கண்டிகை பெரிய ஏரிகளை இணைத்து 7.15 கி.மீ நீளத்திற்கு மண்கரை அமைத்து புதிய நீர்த்தேக்கம் அமைத்தல். ஐந்து மதகுகள் அமைத்து தற்பொழுதுள்ள கண்ணன்கோட்டை மற்றும் தேர்வாய் கண்டிகை ஏரிகளின் பாசனத்திற்கும் (700 ஏக்கர்) வழிவகை செய்தல்.

ஊட்டுக்கால்வாய் அமைக்கும் பணியில் தொலைக்கல் '0' மீட்டரிலிருந்து 8600 மீட்டர் நிலத்தில் மண் தோண்டும் பணிகள் மற்றும் கான்கீரிட் புறணி அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. பணிகள் அனைத்தும் மார்ச்-2020 க்குள் முழுமையாக முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. திட்டத்தின் தற்போதைய செலவின நிலை திட்ட மறு மதிப்பீடு தொகை ரூ.380.00 கோடி ஆகும். இந்த நிலையில் புதியதாக கட்டப்பட்டுவரும் நீர்தேக்கத்தின் பணிகளை அரசு தலைமைச் செயலாளர் கே.சண்முகம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.